## தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 21 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 20 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 மூலதனச் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன செலவினத்தின் கீழ் மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துக்களுக்கான நட்டங்கள் கணக்கிடப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 522,245 இனால் அதிகரித்திருந்தது. | வாக்குப்பணக்கணக்கின் மூலம் செலவு மேற்கொள்ளப் பட்டதுடன் விபத்து நடந்த வருடத்தினுள் காப்புறுதிப்பணம் தொடர்ந்து வந்த வருடத்திலேயே கிடைக்க பெற்றதனால் குறித்த வருடத்தினுள் வாக்குப் பணக்கணக்கிற்கு வரவு வைக்கப்படாது நிதிப்பிரமாணம் 107(3) இற்கமைய வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. | வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்பட்ட நட்டங்கள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 04/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச இல்லத்தில் தம்பதியினராக வசிக்கும் நிர்வாக உத்தியோகத்தரிடமிருந்து அடிப்படைச் சம்பளத்தில் 12.5 சதவீதம் அறவீடு செய்ய வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டிலிருந்து சிக்கன வாடகை மாத்திரம் அறவிட்டதன் விளைவாக ரூபா 295,652 தொகை அரச வருமான இழப்பாக அமைந்திருந்தது. | குறித்த உத்தியோகத்தரின் இல்ல வாடகை அறவீடானது தாபன விதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைக்கமைய 2021 ஜனவரி தொடக்கம் அறவீடு செய்யப்படுகின்றது. | அறவிடப்பட வேண்டிய வாடகையானது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், பெறப்படல் வேண்டும். |

## 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம், முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிலும் செயற்பாட்டுத் திட்டம், பெறுகைத்திட்டம் என்பன தயார்செய்யப்பட்டுள்ளதுடன் நிதிப்பிரமாணம் 135 இற்கமைய அதிகாரக் கையளிப்பு தயார் செய்து தங்களுக்கு பிரதியிட்டு பொருத்தமான அலுவலர்களுக்கு அறியத்தரப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 215 இன் பிரிவு 3 (அ) இன் பிரகாரம் எதிர்பார்க்கும் கொடுப்பனவு செய்வதற்காக அக் கொடுப்பனவானது புறம்பாக வைப்புக் கணக்குகளுக்கு மாற்றப்படலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும், மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் 6000-0-0-13-0-66 தலைப்பின் கீழ் ரூபா 10,133,552 தொகை பெறுமதியான கொடுப்பனவுகள் பேணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்கள் தொடர்பான நிதிப்பிரமாண ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 09 பிரதேச செயலகங்களில் வாரநாட்களில் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பாவனை செய்யப்பட்டு பதிவுகள் காணப்படுகின்ற போதிலும், விடுமுறை மற்றும் வாரஇறுதி நாட்களில் கைவிரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்படாது மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை நாட்கொடுப்பனவாக ரூபா 1,206,229 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், கொடுப்பனவுகள் கைவிரல் அடையாளமிடும் இயந்திர பதிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ரூபா 4.6 மில்லியன் தொகை நிதியேற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரிய கல்லாறு கடற்கரைப் பூங்கா பொறுப்பளிக்கப்பட்ட நிறுவனத்தினால் பராமரிப்பு இன்றி காணப்படுவதுடன் பொருத்தப்பட்ட பொருட்களில் ரூபா 2,351,250 பெறுமதியான பொருட்கள் உடைந்தும் காணப்படுகின்றது. | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரரால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட போதிலும், Covid 19 சூழ்நிலை காரணமாக குறித்த வேலைத் திருத்தத்தில் தாமதம் ஏற்படுகிறது. | ஒப்பந்தக்காரரின் உத்தரவாத காலப்பகுதியின் போது வேலைத்தள பராமரிப்பு சேவைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தாபன விதிக்கோவை அத்தியாயம் XIX பிரிவு 03 இன் பிரகாரம் பதவி நிலைக்கு ஏற்ப அரச இல்லங்கள் வழங்கப் பட்டிருக்காததுடன் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாது இல்லங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் தொடர்ச்சியாக 05 ஆண்டுகள் கடந்த குத்தகைகளை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் வாடகைக்கு எவ்வித தண்டப்பணமும் அறவீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவற்றை முறைமைப்படுத்தி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளுக்கு அமைய வாடகை மீள்மதிப்பீடு மற்றும் தண்டப்பண அறவீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராமிய பொருளாதார மேம்பாடு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்திற்கு ரூபா 13 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டுள்ள போதிலும், அவ்வேலைத் திட்டத்திற்கான பயனாளினை தெரிவு செய்யும் செயன்முறையிலுள்ள குறைபாடுகள் காரணமாக, தொடர்புடைய செயற்திட்டங்களின் பூர்த்தி மட்டம் அடையப் பட்டிருக்கவில்லை. | இரு திட்டங்கள் மூலம் வாழ்வாதார உதவி பெற்ற பயனாளிகளிடமிருந்து ஒரு திட்டம் மூலம் வழங்கிய பொருட்களை மீளப்பெற்று இதுவரை அரச திட்டங்கள் மூலம் வாழ்வாதார உதவி பெறாத பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நலன்களினை வினைத்திறனாக பகிர்ந்தளிக்கப்படக்கூடிய வகையில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கு ஒன்றிணைந்த தேசிய மேம்படுத்தல் வேலைத்திட்டத்திற்காக ரூபா 250,520 தொகை | மழை காரணமாக பழுதடைந்த செடிகள் மீள் நடுகை செய்யப்பட்டு வருகின்றதுடன், பராமரிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதுடன், கிராம | இச் செயற்றிட்டத்தினை அமுல்படுத்த பொருத்தமான காலம் மற்றும் பயனாளியின் இயலுமை பற்றிய |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டு மனைப் பொருளாதார மேம்பாட்டு நோக்கத்திற்காக 28,844 பயனாளிகளுக்கு பழக்கன்றுகள் மற்றும் பயிர் செடிகள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும், பாரிய எண்ணிக்கையான பழம் மற்றும் தானிய நாற்றுக்கள் அழிவடைந்து காணப்பட்டன. | மட்ட ரீதியாக பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விடயங்களைக் கருத்தில் கொண்டு அதனை நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

## 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொருளாதார வலுப்படுத்தல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஏறாவூர்பற்று பிரதேச செயலகத்திற்கு சந்தைக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு ரூபா 16.96 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், முன்மொழியப்பட்ட திட்டத்தில் மாற்றம் காரணமாக ரூபா 2,608,321 தொகை பெறுமதியான வேலைகள் மேற்கொள்ளப்படாமலும், கட்டிடம் யன்படுத்தப்படாமலும் காணப்படுகின்றது. | நீர் வழங்கல் கட்டமைப்பில் சீர்திருத்தங்களை செய்து நீர்வழங்க முற்பட்டுக் கொண்டிருக்கும் போது Covid – 19 சூழ்நிலையால் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | குறிப்பிட்ட செயற்திட்டத்தின் இலக்கினை அடையக்கூடிய வகையில் அவற்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் அமைச்சின் நன்வெமு வேலைத்திட்டத்தின் கீழ் கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டு கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தில் 79 முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான ரூபா 1,705,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், பயனாளிகளின் தெரிவில் குறைபாடுகள் காரணமாக பிரதேச செயலகத்தினால் குறித்த திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் BD/GPS155/09/01/HA-2019 ஆம் இலக்க 2019 நவம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய இச் செயற்திட்டத்திற்குரிய அனைத்து செயற்பாடுகளும் இடை நிறுத்தப்பட்டிருக்கின்றன. | நிதியளிப்பு கிடைக்கப்பெறுகின்ற வேலைத்திட்டங்களை உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடமாவுள்ள 97 கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் 39 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப் படாமையினால் பிரதேச செயலகம் மற்றும் அதன் பிரிவுகளின் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றது. | இதற்குப் பொருத்தமான உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படும் பட்சத்தில் இவ்வெற்றிடங்கள் மீள் நிரப்புதல் செய்யப்படும். | சேவை தேவைப்பாடுகளினை கருத்திற் கொண்டு வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 106 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை விட மேலதிகமாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | பதவியணியினரின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கைக்கு அமைவாக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |